<u>வாக்குமூலம்</u>

<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>

<u>வழக்கு எண் : SC.No. 103/2024</u>

<u>வழக்கு சாட்சி PW-10</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆதிலெட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பால்ச்சாமி | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தூத்துக்குடி | வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of November 18th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் தற்போது திருநெல்வேலி மாநகரம் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் செயலிழக்க செய்தல் பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.03.2019 ம் தேதி, நான் கடையம் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடையம் காவல்நிலைய குற்ற எண்.103/2019, சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act மற்றும் Sec 5 & 7(3) Lottery Regulation Act – வழக்கினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, வழக்கின் சம்பவயிடம் 12.30 மணிக்கு சென்று சாட்சிகள் முருகேசன், சண்முகவேல் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து அவர்களிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.9** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.10** ஆகும். பின்பு, சாட்சிகள் முருகேசன், சண்முகவேல், ஜோசப் பொன்ராஜ், பேச்சிமுத்து ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 1வது சாட்சி பேச்சிமுத்துவை விசாரிக்கும்போது, சம்பவத்தின்போது அவரது TN-18-J-

7174 என்ற இருசக்கரவாகனத்தில் சேதமடைந்த முன்பக்க மக்காடை படிவம் 91ன் மூலம் கைப்பற்றி, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.11** ஆகும். பின்பு வழக்கு பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பரமசிவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் பேச்சிமுத்து, ஜோசப்பொன்ராஜ ஆகியோர் அத்தாட்சியில் கைப்பற்றி ஆஜர்படுத்திய 417 லாட்டரி சீட்டுகள், பணம் ரூ.800/-, TN-76-AE-7468 இருசக்கரவாகனம், மஞ்சள் கலர் துணிப்பை ஒன்று, பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி ஒன்று ஆகியவற்றை ஒப்படைத்ததை படிவம் 91ன் மூலம் கைப்பற்றி, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் **அ.சா.ஆ.12** ஆகும். அந்த அத்தாட்சி **அ.சா.ஆ.13** ஆகும்.

என்னுடைய விசாரணையிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கின் சம்பவம் உண்மையென புலனானதால் நிலையத்தில் இருந்த எதிரி முருகன் என்பவரை மதியம் 02.30 மணிக்கு நிலையத்தில் வைத்து கைது செய்து, உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி, மதியம் 02.35 மணிக்கு எதிரி முருகன் என்பவர் ஆஜர் சாட்சிகள் வாசு, அருணாச்சலம் ஆகியோர் முன்பு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை நிலையம் மடிக்கணினி மூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.14** ஆகும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்கில் சம்பந்தப்பட்ட 2வது எதிரியான கேசவராஜா என்பவரை மாதாப்பட்டிணம் பஸ்ஸ்டாப்பில் வைத்து மாலை 04.30 மணிக்கு கைது செய்து, உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி, அவர் வழக்கின் சம்பவத்திற்கு பயன்படுத்திய TN-76-AH-8596 Activa

இருசக்கரவாகனத்தை எதிரி ஆஜர் செய்ததை சாட்சிகள் ராமராஜ், விக்னேஷ்வரன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினேன். பின்பு எதிரிகள் மற்றும் சொத்துக்கள் சகிதம் நிலையம் கொண்டு வந்து உரிய பதிவேடுகளில் பதிவு செய்தேன். பின்பு சாட்சிகள் வாசு, அருணாச்சலம், ராமராஜ், விக்னேஷ்வரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரிகள் இருவரையும் தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்காக வேண்டி அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பின்பு, 27.03.2019ம் தேதி, வழக்கின் சம்பவத்தில் சேதமடைந்த இருசக்கரவாகனத்தின் மக்காட்டின் சேதமதிப்பு வழங்கிய ராஜீ என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு, 24.06.2019ம் தேதி, எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(2) இதச மற்றும் 3 of TNPPDL Act மற்றும் Sec 5 & 7(3) Lottery Regulation Act ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து, அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

காவல்நிலையத்தில் தினமும் ரோல் கால் நடக்கும் என்றால் சரிதான். அந்த ரோல் காலில் யார், யாருக்கு என்னென்ன பணி என்று ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் சரிதான். காவலர்களுக்கு பாக்கெட் டைரி உண்டு என்றால் சரிதான். அன்றாட பணிகளை குறித்து அதில் எழுதிக்கொள்வார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் அரசுதரப்பு சாட்சிகளை விசாரித்து, அவர்களின் பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில்

ஆஜர் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பாக்கெட் டைரியை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தால், இந்த வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதினால் ஆஜர் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேதமதடைந்ததை காட்டக்கூடிய எந்தவொரு வாகனத்தின் போட்டோவையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.9 ராஜீவை 27.03.2019ம் தேதியில் கடையத்தில் வைத்து விசாரித்தேன். நான் அவரிடம் கொட்டேசன் மட்டும் தான் வாங்கினேன் என்றால் மொத்த மதிப்பு சான்றிதழ் வாங்கினேன். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் அ.சா.1 புகார் மனு கொடுத்ததாக சொன்னது பொய் என்றால் சரியல்ல. நான் ஆவணங்கள் அனைத்தையும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.11.19 12:12:39 +0530